**11 P**

பதிவு எண். 

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2019

## தமிழ்

நேரம் : 1.30 மணி — மதிப்பெண்கள் : 50

**I. பலவுள் தெரிக.** **8 x 1 = 8**

1. பாயிரம் இல்லது..........அன்றே.

அ) பனுவல் ஆ) காவியம் இ) பாடல் ஈ) செய்யுள்

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரம் ஈ) இவை மூன்றும்

3. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) அண்ணா ஆ) அண்ணாமலையார் இ) முருகன்

ஈ) அண்ணப்ப தேசிகர்

4. 'இந்தளம்' – பண்ணைப் பாடுவன அ) கிளிகள் ஆ) காவடி சுமப்போர் இ) வண்டுகள் ஈ) உள்ளான் பறவை

5. கீழ்க்காணும் சொற்களில் யானையைக் குறிப்பிடாதது எது?

அ) அஞ்சனாவதி ஆ) அஞ்சுகவதி இ) கரி ஈ) அத்தினி

6. 'ஈறுபோதல்', 'இனமிகல்' என்னும் விதிகளின்படி அமைந்த சொல்

அ) கருங்கடல் ஆ) செந்தமிழ் இ) நெட்டிலை ஈ) மூதூர்

7. 'கோட்டை' என்னும் சொல்லை 'க்வாட்' என்றழைக்கும் மொழி

அ) துளு ஆ) தோடா இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

8. 'தின்வர்த்தமானி' இதழை நடத்தியவர் யார்?

அ) சி.வை. தாமோதரனார் ஆ) ஆர். பாலகிருஷ்ணன்

இ) பெரியவன் கவிராயர் ஈ) பெர்சிவல் பாதிரியார்

**II. எவையேனும் நான்கனுக்கு விடையளி.** **4 x 2 = 8**

9. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) ஈன்ற ஆ) அலர்ந்து

10. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

அ) பூப்பந்து ஆ) வானொலி

11. ஏதேனும் இரண்டனுக்கு இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) தாவி ஆ) நன்று நன்று இ) முயலா

12. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர்.

13. அ) Etymological Dictionary ஆ) Cultural Elements – தமிழாக்கம் தருக.

**III. அடிமாறாமல் எழுதுக. 4 + 2 = 6**

14. 'ஏடு தொடக்கி' எனத் தொடங்கும் யுகத்தின் பாடல் எழுதுக. 'வடு' என முடியும் குறளை எழுதுக.

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3 x 2 = 6**

15. பாயிரம் பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?

16. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.

17. கோட்டை எனும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

18. காவடிச் சிந்து என்பது யாது?

**V. எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 x 4 = 8**

19. 'சலச வாவியில் செங்கயல் பாயும்' – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

20. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமா? விவரி.

21. ஆறுமணிக்குருவி – குறிப்பு வரைக.

**VI. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. 1 x 6 = 6**

22. யானை டாக்டர் கதை மூலம் நமக்குள் ஏற்படும் மாற்றம் மற்றும் உயிரினப் பாதுகாப்பு குறித்து கட்டுரைக்க.

23. தமிழர் இருப்பிடமும் இயற்கையோடியைந்ததே – கூற்றை மெய்ப்பிக்க.

**VII. அனைத்துக்கும் விடையளி. 4 + 4 = 8**

24. வேற்றுமை அணியை சான்றுடன் நிறுவுக. (அ)
சொல் பின்வரும் அணியை உதாரணத்துடன் விளக்கு.

25. தமிழாக்கம் தருக.
அ) Roads were made for journeys not destinations - Confucius.
ஆ) Look deep into nature and then you will understand everything better - Albert Einstein.